දුරකථන ) 0112669192 , 0112675011
தொலைபேசி ) 0112698507 , 0112694033
Telephone ) 0112675449 , 0112675280

ෆැක්ස් ) 0112693866
பெக்ஸ் ) 0112693869
Fax )0112692913

විද්‍යුත් තැපෑල )postmaster@health.gov.lk
மின்னஞ்சல் முகவரி )
e-mail )

වෙබ් අඩවිය ) www.health.gov.lk
இணையத்தளம் )
website )

සුවසිරිපාය
சுவசிரிபாய
SUWASIRIPAYA

සෞඛ්‍ය අමාත්‍යාංශය
சுகாதார அமைச்சு
**Ministry of Health**

මගේ අංකය )
எனது இல )
My No. ) **CF/EXG/01/2020**

ඔබේ අංකය )
உமது இல )
Your No. : )

දිනය )
திகதி ) **2021/01/** 05
Date )

---

பொது சுற்றுநிருப இலக்கம் : 02 - 04 /2021

மாகாண சுகாதார செயலாளர்கள்
பிரதிப் பணிப்பாளர் நாயகம் - இலங்கை தேசிய வைத்தியசாலை.
மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர்கள்
மத்திய அமைச்சின் கீழ் உள்ள அனைத்து வைத்தியசாலைகளின்
பணிப்பாளர்களும், திணைக்களத் தலைவர்களும்.
பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர்கள்
உரிய நிறுவனத் தலைவர்களுக்கும்,

**சுகாதார அமைச்சில் தொழிநுட்பம் சாராத ஆரம்ப தர சேவைப்பிரிவு PL - 01 - 2006 (ஏ) சுகாதார அலுவல்கள் பணியாளர் (சிற்றூழியர் தரம்) பதவியில் தரம் III ஐ சேர்ந்தவர்களுக்கான முதலாவது வினைத்திறமைகாண் தடைப்பரீட்சை - 2020 (முதலாவது தடவை)**

சுகாதார அமைச்சில் தொழிநுட்பம் சாராத ஆரம்ப தர சேவைக்குழு PL - 01 - 2006 (ஏ) தரம் III ற்கு ஆட்சேர்த்துக் கொள்ளப்பட்டு 03 வருடங்கள் நிறைவடைவதற்கு முன்னர் சித்தியடைய வேண்டிய முதலாவது வினைத்திறமைகாண் தடைப் பரீட்சை சிங்களம், தமிழ், ஆங்கிலம் ஆகிய மும் மொழிகளிலும்நடாத்தப்படும் என்பது இத்தால் அறியத்தரப்படுகின்றது. பரீட்சை நடைபெறும் காலம், இடம், நேரம், என்பன பரீட்சை அனுமதி அட்டையில் குறிப்பிட்டு அனுப்பி வைக்கப்படும். (சுகாதார செயலாளரது 01-16/2020 ஆம் இலக்க பொது சுற்று நிருபத்தின் பிரகாரம் 05/02/2020 ம் திகதிய 02-15/2020 ம் இலக்க சுற்று நிருபக் கடிதத்தினால் செய்யப்பட்ட அறிவித்தல் இரத்துச் செய்யப்பட்டுள்ளது.)

**02** **தகைமைகள்**

சுகாதார அமைச்சில் தொழிநுட்பம் சாராத ஆரம்ப தர சேவைக்குழு PL - 01 - 2006(A) யிற்குரிய சுகாதார அலுவல்கள் பணியாளர் தரம் III ற்கு நியமனம் பெற்றுள்ளவர்கள் மாத்திரம் இப் பரீட்சைக்குத் தோற்ற முடியும்.

**(கவனிக்கவும்** : - சுகாதார செயலாளரின் பொதுச் சுற்று நிருப இல: 02-90/2015 மற்றும் 2015.08.12 ஆம் திகதிய கடிதத்தில் குறிப்பிடப்பட்டுள்ளவாறு 2012.07.20 ஆம் திகதியுடன் சுகாதார அலுவல்கள் பணியாளர் (சிற்றூழியர் தரம்) தரம் III ல் மூன்று வருடங்களை கடந்துள்ளவர்கள் இந்த பரீட்சையிலிருந்து விடுவிக்கப்பட்டுள்ளதால் அவர்கள் இப்பரீட்சைக்கு தோற்றவேண்டிய அவசியமில்லை.

**03** விண்ணப்பங்கள்

இச்சுற்று நிருபத்தின் இறுதியில் காட்டப்பட்டுள்ள மாதிரிக்கு அமைவாக தயாரிக்கப்பட்டு பூரணப்படுத்தப்பட்டுள்ள விண்ணப்பதாரர்களின் விண்ணப்பங்கள் தங்களினுடைய திணைக்களத் தலைவரின் ஊடாக பணிப்பாளர் (பரீட்சைகள்) , சுகாதார அமைச்சு,"சுவசிரிபாய", இலக்கம் - 385, வணக்கத்திற்குரிய பத்தேகம விமலவங்ச தேரர் மாவத்தை, கொழும்பு - 10 என்னும் முகவரிக்கு **2021/02/12** ம் திகதிக்கு முன்னர் கிடைக்கக்கூடியவாறு அனுப்பி வைத்தல் வேண்டும். விண்ணப்பப் பத்திரத்தில் கொடுக்கப்பட்டுள்ள அனைத்து தகவல்களும் சரியானவை என நிறுவனத் தலைவரினால் உறுதிப்படுத்தப்பட்டு இருக்க வேண்டும். தங்களது விண்ணப்பப் பத்திரத்துடன் விண்ணப்பதாரியின் முகவரியிடப்பட்டரூபா.45 பெறுமதியுடைய முத்திரை ஒட்டப்பட்ட கடித உறை இரண்டினையும் (இதில் விண்ணப்பதாரி தனது சொந்த முகவரியினையோ,அல்லது அலுவலக முகவரியினையோ குறிப்பிடலாம்) இணைத்து அனுப்பி வைக்க வேண்டும். விண்ணப்ப முடிவுத்திகதிக்குப் பின்னராக கிடைக்கும் விண்ணப்பங்கள் எதுவித அறிவித்தலும் இன்றி நிராகரிக்கப்படும்.

**விண்ணப்பமானது A4 தாளின் இருபக்கங்களினையும் பயன்படுத்தி தயாரிக்கப்படவேண்டும். மத்திய அரசின் கீழ் சேவைபுரிபவர்கள் முதலாவது பக்கத்தில் 01 - 04 வரையான விபரங்களும், இரண்டாவது பக்கத்தில் 05-08 வரையான விபரங்களும் உள்ளடக்கப்பட்டிருக்க கூடியவாறு இருத்தல் வேண்டும். மேற்படி மாதிரிக்கு ஒவ்வாத விண்ணப்பங்கள் எதுவித அறிவித்தலும் இன்றி நிராகரிக்கப்படும்.**

**04** பரீட்சைக் கட்டணம்

4.1 முதன் முறையாக பரீட்சைக்கு விண்ணப்பிக்கும் விண்ணப்பதாரிகள் பரீட்சைக்கட்டணங்களிலிருந்து விடுவிக்கப்பட்டுள்ளனர். ஏனைய விண்ணப்பதாரிகள் ஒவ்வொரு விடயத்திற்கும் ரூபா.25 வீதம் இரத்துச் செய்யப்படாத முத்திரையினை ஒட்டி அதன் மீது தமது கையொப்பத்தினை இட்டு இரத்துச் செய்யப்பட்டிருத்தல் வேண்டும்.

4.2 எக் காரணத்தினைக் கொண்டும் இவ்வாறு செலுத்தப்பட்ட பரீட்சைக் கட்டணமானது வேறு பரீட்சைகளின் பொருட்டு மாற்றப்படுதலோ, அல்லது மீளப் பெறுதலோ மேற்கொள்ள இடமளிக்கப்படமாட்டாது.

**05** பரீட்சையின் பொருட்டு உட்பத்திக் கொள்ளுதல்

5.1 ஏற்றுக்கொள்ளப்பட்ட விண்ணப்பங்களின் பொருட்டு விண்ணப்பதாரிகளுக்கு பரீட்சை அனுமதி அட்டைகள் அனுப்பிவைக்கப்படும். அப் பரீட்சை அனுமதிப் பத்திரத்தினை உரிய முறையில் பூரணப்படுத்தி பரீட்சை குழுவின் தலைவரிடம் கையளிக்க வேண்டும். அவ்வாறு மேற்கொள்ளப்படவில்லையாயின் பரீட்சைக்கு தோற்றுவதற்கு இடமளிக்கப்படமாட்டாது.

5.2 பரீட்சையின் பொருட்டு விண்ணப்பித்துள்ள விண்ணப்பதாரிகளின் பொருட்டு பரீட்சைக் குழுவின் தலைவருக்கு தங்களினது ஆள் அடையாளத்தினை உறுதிப்படுத்திக் கொள்ளுவதன் பொருட்டு கீழ் குறிப்பபிடப்பட்டுள்ள ஆவணங்களில் ஒன்றினை கொண்டு வருதல் வேண்டும்.

(அ) தேசிய அடையாள அட்டை
(ஆ) திணைக்களத்தினால் வழங்கப்பட்டுள்ள அடையாள அட்டை
(இ) வலுவுள்ளசாரதி அனுமதிப்பத்திரம்
(ஈ) வலுவுள்ளகடவுச் சீட்டு

06 பரீட்சை திட்டம்

- இது ஒரு வாய்மொழி மூலப் பரீட்சையாகும். (பரீட்சை சபையினால் கேட்கப்படும் வினாக்களுக்கு வாழ்மொழியாக பதிலளிக்க வேண்டும்).நேரம் 15 நிமிடங்களாகும். மொத்தப் புள்ளிகள் 100 ஆகும். சித்தியடைவதன் பொருட்டு 40 புள்ளிகளை பெற்றுக் கொள்ள வேண்டும்.

07 விடயப்பரப்பு

சாதாரண நிர்வாகம்

(i) உரிய உத்தியோகத்தர் தான் சேவை புரியும் நிறுவனத்திற்கு ஒப்படைக்கப்படும் கடமைகள் தொடர்பாக போதியளவு அறிவினைக் கொண்டுள்ளாரா என்பதை அளவீடு செய்தல். (30 புள்ளிகள்)

(ii) சாதாரண அலுவலக முறை மற்றும் நிறுவன நிர்வாக முறைகள் தொடர்பாக பதவிக்கு பொருத்தமான அறிவு. (30 புள்ளிகள்)

(iii) பதவியின் பொருட்டு ஒப்படைக்கப்படும் வெவ்வேறு கடமைகள் தொடர்பாக போதுமானளவு அறிவு மற்றும் ஆற்றல்களை பெற்றக் கொண்டுள்ளாரா என்பதை அளவீடு செய்தல். (40 புள்ளிகள்)

08 பரீட்சைதொடர்பானஒழுங்குவிதிகளைக் கடைப்பிடித்தல்.

பரீட்சார்த்திகள் குறிப்புக்களைதன்னிடத்தில் வைத்துபார்த்துஎழுதுதல் தடைசெய்யப்பட்டுள்ளது. ஏனைய பரீட்சார்த்திகளின் விடைத்தாளினைபார்த்துஎழுதுதலும் தடைசெய்யப்பட்டுள்ளது. ஒருவருக்கொருவர் உதவிசெய்தலைதவிர்த்துக்கொள்ளல் வேண்டும். மேலும் கையடக்கத் தொலைபேசிமற்றும் அதனுடன் தொடர்புடையதொடர்பாடல் ,இலத்திரணியல் உபகரணங்களை பயன்படுத்தாதிருத்தல் வேண்டும். இவ்விதிகளைமீறும் எந்தவொரு பரீட்சார்த்தி மீதும் நடவடிக்கை எடுக்கப்படும்.

09 இச்சுற்றறிக்கையில் உள்ள விடயங்களை உமது நிறுவனத்தில் உள்ள சகல சுகாதார அமைச்சின் கீழ் பணிபுரியும் ஆரம்ப தொழிநுட்பம் சார்ந்த உத்தியோகத்தர் சேவை பிரிவின் (PL - 01 - 2006 (ஏ) சம்பள அளவுத்திட்டத்தில் குறிப்பிடப்பட்டுள்ள பொருத்தமான சகல அலுவலர்களுக்கும் அறியப்படுத்துவதற்கு ஒழுங்கினை மேற்கொள்ளவும். (இந்த விபரங்களை www.health.gov.lk எனும் இணைய முகவரியிலிருந்து பெற்றுக் கொள்ளமுடியும்.)

**கவனிக்கவும் : சிங்களம், தமிழ், ஆங்கில மொழி மூல சுற்றுநிறுபங்களுக்கிடையே ஏதாவது வேறுபாடுகள் காணப்படுமாயின் சிங்கள மொழி மூல சுற்றுநிருபமே வலுவுடையதாகும்.**

ஒப்பம்
யு ஏ எஸ் எச் சிசிர குமார
பிரதிப் பணிப்பாளர் நாயகம் (நிர்வாகம்) ஐஐ
செயலாளரின் பொருட்டு
சுகாதார அமைச்சு

U.A.S. Harshapriya Sisira Kumara
Deputy Director General (Administration) 02
Ministry of Health
"Suwasiripaya"
Colombo 10

**EXG**

| அலுவலக உபயோகத்தின் பொருட்டு |
|---|
| |

மாதிரி விண்ணப்பப் படிவம்

சுகாதார அமைச்சில் தொழிநுட்பம் சாராத ஆரம்ப தர சேவைப்பிரிவு **PL - 01 - 2006** (ஏ) சுகாதார அலுவல்கள் பணியாளர் (சிற்றூழியர் தரம்) பதவியில் தரம் **III** ஐ சேர்ந்தவர்களுக்கான முதலாவது வினைத்திறமைகாண் தடைப்பரீட்சை – 2020 (முதலாவது தடவை)

**01.** (அ) (i) விண்ணப்பதாரியின் முழுப் பெயர் (தமிழில் எழுதவும்): ..............................................

.............................................................................................................

(ii) விண்ணப்பதாரியின் முழப் பெயர் (ஆங்கில கெப்பிட்டல் எழுத்தில் ) :

| | | | | | | | | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | | | | | | | | | | | | | | |

(iii) முதல் எழுத்துக்களுடன் பெயர் : (தமிழில் :...........................................................

.............................................................................................................

(iv) முதல் எழுத்துக்களுடன் பெயா ( ஆங்கில கெப்பிட்டல் எழுத்துக்களில்)

| | | | | | | | | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | | | | | | | | | | | | | | |

(ஆ) (i) பதவி .....................................................................................................

(ii) தரம் III ற்கு நிரந்தர நியமனம் பெற்ற தகதி: ..............................................................

(iii) 2012.07.20 ம் திகதியன்று சேவைக்காலம் : ..............................................................

(iv) தற்போது பெறும் வருடாந்த வேதனம் :..........................................................

(iv) கையடக்கத் தொலைபேசி இல : | | | | | | | | | | |

(v) தேசிய அடையாள அட்டை இல: | | | | | | | | | | | | |

**02.** (அ) தற்போது சேவை புரியும் நிறுவனம் :..............................................................

அதற்குரிய மாவட்டம்:.............................................................................................

(ஆ) அந் நிறுவனம் உரித்தாவது - மத்திய அமைச்சின் கீழ் ☐

- மாகாண அமைச்சின் கீழ் ☐

(இ) பரீட்சை அனுமதி அட்டை அனுப்புவதன் பொருட்டு தெளிவாக விண்ணப்பதாரியினது முகவரியிடப்பட்ட 9"x4" அளவு ரூபா.45 பெறுமதியுடைய முத்திரை இடப்பட்ட கடித உறை 02 இணைக்கப்பட்டு உள்ளதா? ...................................................................................................

(ஈ) (i) தபால் முகவரி (சிங்களத்தில்):...............................................................................

(ii) தபால் முகவரி (ஆங்கில கப்பிற்றல் எழுத்துக்களில்) :................................................

**03.** பரீட்சைக்கு தோற்றவுள்ள மொழி (சிங்களம் / தமிழ் / ஆங்கிலம்) :..................................

**04.** (அ) இதற்கு முன்னர் பரீட்சைக்குத் தோற்றியுள்ளீரா? .............................................

(ஆ) அவ்வாறு தோற்றியிருந்தால் இந்த தடவை முத்திரை ஒட்டப்பட்டுள்ளதா?

| முத்திரைக்கூண்டு |
|---|
| |

**05. விண்ணப்பதாரியின் உறுதியுரை**

(i) இவ்விண்ணப்பத்தில் கொடுக்கப்பட்டுள்ள தகவல்கள் அனைத்தும் உண்மையானவை என்றும் இப் பரீட்சைக்கு நான் முதற்தடவையாக தோற்றுவதனால் பரீட்சைக் கட்டணம் செலுத்தத் தேவையில்லை என்றும் / முதற் தடவை அல்லாத படியால் ரூபா................ பெறுமதியுடைய முத்திரை ஒட்டியுள்ளதாகவும் இம் முத்திரையானது விண்ணப்பப்படிவத்தில் ஒட்டி இரத்துச் செய்வதற்கு முன்னர் பாவிக்கப்படாத பெறுமதியுடைய முத்திரையெனவும் தெரிவித்துக் கொள்ளுகின்றேன்.

(ii) சுகாதாரம் மற்றும் சுதேச வைத்திய சேவைகள் அமைச்சினால் பரீட்சைகள் தொடர்பாக வெளியிடப்பட்டுள்ள சட்ட திட்டங்களுக்கு அமைய செயற்படுவேன் என்றும், இப் பரீட்சை தொடர்பான பிரமாணங்களுக்கு அமைய நான் தகைமையற்றவனாக காணப்பட்டால் எனது பரீட்சார்த்தித் தன்மையினை இரத்துச் செய்தவற்கும் இது தொடர்பாக எடுக்கப்படும் எந்த தீர்மானத்திற்கும் இணங்குவேன் என்றும் இத்தால் தெரிவித்துக் கொள்ளுகின்றேன்.

திகதி :.....................

............................................
விண்ணப்பதாரியின் கையொப்பம்

**06. தனிநபர் கோவையினை கையாளும் விடய முகாமைத்துவ உதவியாளரின் உறுதியுரை**

இந்த விணணப்பம் விண்ணப்பம் பாரமேற்கப்படும் தினத்திற்கு முன்னர் என்னிடம் கிடைக்கப்பெற்தென்றும், தனிநபர் கோவையில் உள்ள தகவல்களுக்கு அமைய விண்ணப்பதாரி இந்த விண்ணப்பத்தை சரியாக பூரணப்படுத்தியுள்ளதாகவும், இந்த விண்ண்பத்தில் பிரதி தனிநபர் கோவையில் கோவையிடப்பட்டுள்ளதென்றும் உறுதிப்படுத்துகின்றேன்.

திகதி ..............................

............................................
பெயர், கையொப்பம்

**07. நிறுவனத் தலைவரின் சான்றிதழ்**

திருவாளர்/திருமதி/செல்வி..........................................................................என்பவர்............................
...................................................... ஆக் இந்நிறுவனத்தில் சேவையாற்றுகின்றார் எனவும் இவ் உத்தியோகத்தர் இப்பரீட்சைக்குத் தோற்றுவது முதன் முறைஎன்பதால் / முதன் முறையல்ல என்பதால் ரூபா ................ பெறுமதியான முத்திரைகள் இவ்விண்ணப்பத்தில் ஒட்டியுள்ளதாகவும் / முத்திரைகள் ஒட்ட அவசியமில்லை எனவும், விண்ணப்பத்தில் கொடுக்கபட்டுள்ள தகவல்கள் விண்ணப்பதாரியின் சுயவிபரக் கோவையில் உள்ள விபரங்களின் படி சரியானவைகள் எனவும், இப்பரீட்சைக்கு விண்ணப்பிப்பதற்கான தகைமைகளை இவர் கொண்டுள்ளர் எனவும், எனது முன்னிலையில் கையொப்பமிட்டுள்ளார் என்பதையும் உறுதிப்படுத்துகின்றேன்.

திகதி ............................

............................................
நிறுவனத் தலைவரின் கையொப்பம்

**08. விசேட பிரிவின் தலைவரின் உறுதிப்படுத்தல்**

திரு/திருமதி/செல்வி/செல்வன் ..............................................என்பவர் எனது நிறுவனத்தில் ........................................உத்தியோகத்தராக பணியாற்றுகின்றார் என்னும், விண்ணப்பத்தில் கொடுக்கப்பட்டுள்ள தகவல்கள் சுயவிபரக் கோவைக்கு அமைய சரியானவையென்றும், இப்பரீட்சைக்குத் தோற்றுவதற்கு உரிய தகைமைகளினை இவர் பூத்தி செய்துள்ளார் என்றும் உறுதிப்படுத்துகின்றேன்.

திகதி:.....................

............................................
பன்முகப்படுத்தப்பட்ட பிரிவு / விசேட பிரிவு தலைவரின் கையொப்பம்
(இறப்பர் முத்திரை இடப்பட வேண்டும்)